

அமரர். செல்வி சிவகுமாரன் ஹம்சத்வனி

அவர்களின்

# நினைவு மலர்

09.09.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எம்மை விட்டுச் சென்ற

ஒளிச்சுடரே!

எம் குடும்பத்தின்

இளந்துளிரே!

ஞாலத்தை ஞானத்தால் வென்ற

ஞானாம்பிகையே!

எம் அன்புக் காணிக்கையாக

இந் நினைவிதழை

கல்வியுலகிற்கே சமர்ப்பித்து – உனது

ஆத்ம ஈடேற்றத்திற்கு

இறையடி பணிகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர்
# செல்வி.ஹம்சத்வனி சிவகுமாரன்

மலர்வு
27.08.1996

உதிர்வு
26.07.2017

## திதிவெண்பா

'பண் பார்ந்த சிவனருள் செல்வி ஹம்சத்வனி
விண்' சார்ந்து மேவி விளங்கிய தினம்
ஆண்டு ஏவிளம்பி வருட ஆடி சீர் பூர்வ பட்சம்
பூண்ட சதுர்த்தசி திதியே போற்று"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமம் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தனைக்
காதலான் கூப்புவார்தம் கை.

## தேவாரம்

எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும் புகழாளர்
கோணமா மலையமர்ந் தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே! சிவபெருமானே!
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிரஎன் கண்கள் குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்கு பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருளி
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டி பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்வேண்டில் நான்
மகிழ்ந்து பாடி அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ்இருக்க என்றார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனாய் வாழ்வினைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே!
உத்தமா ஞான சற்குண நேயா!
ஒப்பிலா மாமணி திரிவாசா
வித்தகா! ஞான சந்தினி பாதா!
வெற்றி வேலாயுதப் பெருமானே!.

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

**கலைமகளாய் வந்தவளே............**

**காத்திருக்கின்றோம் என்நாளும்......**

குரைகட லோத நித்திலங் கொழிக்கும்

கோணமா மலையமர்ந்த ஈசனின்

வரையருளால் இருபத்தேழு ஆவணி

தொண்ணூற்று ஆறு தனில் சிவகுமாரன்

பிரபாலினி தம்பதியர் மகிழ்ந்திட

மூன்றாவது முத்தாய முகிழ்ந்தாரே

மறவா பாச சகோதரங்களான ஹயக்கிரிவன்

இந்துஜன் கூடியே ஒன்றாய் இருந்தனரே!

சாம்பல்தீவு இல்லமதில் சிறுவயதினில்

சகோதரங்களுடன் கூடி விளையாடி

அம்மையாவின் அரவணைப்பில் அன்போடு

பால்பெட்டியில் ஊரைச் சுற்றி

அப்பா அம்மாவின் வரவிற்காய் காத்திருந்து

அண்ணாமாருடன் தங்கையும் ஒருவராய்

சிறுசிறு குறும்புத் தனங்களோடே

அழகும் அற்புதமே கண்டிருேன்றால்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெதடிஸ்து மிசன் பாலர் பாடசாலைக்கு
சிவப்பு நிற பாவாடை சட்டையுமாய்
சின்னண்ணாவின் கரமது பற்றியே
நடந்து செல்லும் அழகும் சிறப்பே!
உவர்மலை விவேகானந்தாவில் கற்றபோது
பாலர் வகுப்பினில் நிறைவாய்
மிளிர்ந்தாரே பருப்பும் சோறும்
அப்பம்மா கையினால் சாப்பிடவே!

புலமைப் பிரிவு ஐந்தாம் தரத்தினில்
எவரின் உதவியும் இன்றியே
சித்தியும் பெற்று கல்வித் தரங்கள்
உயர உயர கல்வியில் சிறந்து
பரதநாட்டியம் மூன்றாந் தரத்திலும்
சித்திபெற்று தமிழ்த்தின விழா
ஆங்கில மொழி தின, கணித, விஞ்ஞான
போட்டிகளிலும் வெற்றியும் பெற்றாரே!

பெண் சாரணியாகி சூழல் பாதுகாப்பில்
ஈடுபட்டு மாணவத் தலைவியுமாகி
சாதாரண தர பரீட்சையினில் அதி விஷேட
சித்திகள் பெற்று அண்ணாமாரை
கல்வியில் மிஞ்சுவேனென்று வாயாரச்
சொல்லி உயர்தரகல்வி பரீட்சையில்
மாவட்ட மட்டத்தில் அதி விசேடசித்திகள்
பெற்று மூன்றாவதாய் வந்தாரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியின் டியூசனில் தானும் ஆசிரியராகி

சீமா கல்வியில் விஷேட சித்தி

புலமைப் பரிசும் பெற்று விட பயின்று

தாயுடன் கொழும்பு மேலும் வந்தே

கொழும்பு பல் கலைக்கழகத்தில் முகாமைத்துவ

பீடமதில் தனது பட்டப்படிப்பினைத்

மேற் கொண்டு வந்தே CIMA

CMA கல்வியில் இரண்டாண்டு முடித்தாரே!

ஆங்கில மொழிபெயர்ப்பில் சிறந்து

மாணவர் மெச்சிட மொழிப் புலமை

பெற்றே ஆறு மாத பரீட்சையையும்

முடித்து விட்டே வந்தார் இல்லத்திற்கு

காலனவன் காத்திருந்தான் வேலையும்

வந்ததே விளையாட்டு நஞ்சாய்

வந்த வேலை முடிந்ததோ யார்

மறிப்பார் எம்மாலும் முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகம் காட்டேன்......

ஒழுக்கத்தில் சிறந்தென்னை பாசமாக்கி
வாயார வாழ்த்தி மகிழவும் வைத்தவரோ
சோகத்தில் நானுன்னை சோதிக்க விரும்பவில்லை
ஜோதியில் கலந்தவளே! என்னாசை மகளே!
கல்வியில், நடனத்தில் உனது திறமைகண்டு:
பூரித்து இருந்தேனே! கண் திறக்காது
குருடனாய் நடக்கின்றேன். உன்பிரிவால்
என்னிலை பாராயோ? வந்து முகம் காட்டேன்
ஆசைக்கொரு மகளென்று அற்புதமாய்
நான் பார்த்தேன்.
ஓசையின்றி நீ நடைபயிலும் நடைதனிலும்
நான் மகிழ்ந்தேன்.
பாஷை மொழியெல்லாம் நன்றாய் வருவதினில்
வரையில்லா ஆசையானேன்
நேசமாய் நீயும் என்னோடு பேசியதும்
நினைத்தே அழுகின்றேன்
தாசனானேன் என்மகள் நீயென்று
உருகியும் போனேனே!
கல்வியின் சிறப்பு கண்டு பூரித்தும்
போனேன் நானும்.
பல்கலையிலும் நின் தேர்ச்சி என்னையும்
தலை நிமிர்த்தியதே.
நல் சாரண உடைதனில் நின் மிடுக்கு
வானத்தில் மிதந்தேனே!
சொல்லொன்றாய் செயலுமொன்றாய்
உன்னிடம் கண்டேனே!
நல்வரவு நீயென்று ஏமாந்தா போனேன்?
என்னாசை மகளே!

**- அப்பா -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை மகளே......

ஆசை மகளே! மடிமீது தவழ்ந்தவளே!
நேசமாய் என்னோடு தோழியுமாய்
பேசியெனை வென்றெடுத்து எனையே
வியக்கவும் வைத்தவளே! என் இராசாத்தி!
போய் வாறேன் என்று சொல்லி
போயும் வந்தவளே! என்னம்மா உனக்கு
போகாத இடத்துக்கு போய் வாறேன்
என்றெனக்கு சொல்லாமல் போகிடவே
மனதும் வந்ததுவோ என்னாசை மகளே!
வயிறு எரியுதம்மா! நீயென் தோளோடு
சாய்ந்திருந்த சுகமதனில்
தாயாய் எனையணைக்கா தோழியாய் ஆக்கி
மகிழ்ந்திருந்த மகளே!
சேயாய் தவிக்கின்ற என் பதைப்பு
தெரிந்தே போனியோ?
ஓயாது தேடுகின்றேன் நீயும் எங்கே?
சொல்லம்மா என்மகளே
வகை வகையாய் என்கையால் நீயும்
ஆசை ஆசையாய் உண்டதுவும்
போகையில் என்னணைப்பில் குழந்தையாய்
விம்மி கேட்டதுவும்
போகிற நிமிடமதில் முள்ளாய் குத்துதம்மா!
வலியால் துடி துடித்தே
வேகியே தவிக்கின்றேன் வா மகளே!
அம்மாவை பாரனம்மா!

**- அம்மா -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலமே காலனாய்.....

பேச்சினில் சுவை கண்டோம்.
அழகுநடைதனில் எமைமறந்தோம்
போட்டி போட்டு படிப்பதனில் உன்
திறன் கண்டு வியந்தோம் தங்கச்சியே!
அண்ணா வென்று இனி யாரெமை அழைப்பர்?
அரும்பிய மொட்டே மலராய் மலர்ந்து
வாசம் வீசும் உன் நறுமணத்தில்
நாமும் நுகர்ந்து ஆனந்திக்க இருந்தோமே
நினைவுகள் கனவுகளாக போனதே
காலமே காலனாக வந்தானோ?
கண்ணீர் விட்டே அழுகின்றோம்
அன்பு அழகு சகோதரியே! தாயே!

**அண்ணாமார்**

**ஹயக்கிரீவன், இந்துஜன்**

# என்னையும் துணைக்கு

பாச பேத்தியே! பாதியிலே போனதேனோ?
அப்பம்மா நானுனை சீராட்டி வளர்த்தேனே!
பருப்பும் சோறும் என்றால் விருப்பமுடன்
வாய் திறந்து சாப்பிடும் அழகுதனில்
நானென்னை மறந்தேனே! பாவியெனை
பரதவிக்க விட்டு விட்டு தனியாகச்
சென்றனையோ? துணைக்கு என்னையும் நீ
அழைக்காததும் ஏனோ? ஆசைப் பேத்தியே!

**– அப்பம்மா –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏமை ஏன் மறந்தனையோ!

சித்தி சித்தப்பா என்று சுற்றி சுற்றி வருவாய்.
ஆடைகாட்டி அழகுகாட்டி படிப்பைக்காட்டி
காப்புகாட்டி செருப்பு காட்டி தோடுகாட்டி
கம்சா என்றேதான் உன்குடும்பத்தையே
யன்னலில் நின்று நான் விழிப்பேன்.
தொலைவில் நான் எங்கு நின்றாலும்
தொலைபேசியால் அழைத்திடுவாய்.
உன் பயணப் பாதையில்
பல தடவை அறிவுரைக்கும், ஆலோசனைகளுக்கும்
ஆசீர்வாதத்திற்கும் என்னிடம் ஓடிவருவாய்.
திருநீறுடன் செந்தூரம் தடவி
கட்டியணைத்து கன்னத்தில் முத்தமிடுவேன்
காலில் விழுந்து வணங்கி பயணம் சொல்வாய்.
ஏனம்மா? இறுதிப்பயணத்தில் சித்தி என்றொரு சொல்
சொல்லாமலே சென்றுவிட்டாய்
என் பிள்ளைகளுக்கு அக்கா என்றழைக்க
இருந்த ஒரே உறவு நீயேதான்.
ஒட்ட நறுக்கி விட்டு ஓடி விட்டாய் வெகுதூரம்
கட்டிலில் புரண்டு கொண்டு அவர்களுடன்
குட்டிக் கதைகூறும் காலம் இனி வராதோ?
என எண்ணி எண்ணி ஏங்கும்
உன் தங்கைமாரின் ஏக்க ஓலம் கேட்காயோ
''கம்சு, கம்சு '' என்று உன்பின்னால் லிச்சுவும்
''கம்சாக்கா கம்சாக்கா '' என தரங்காவும், கேஷாவும்
வளைய வளைய வந்து வாயார பேசினதை
மறந்து நீயும் சென்றாயோ
மண்ணுலகு போதுமென்று.
மறதியைப் போலொரு மாமருந்து இல்லை
ஆனால் உன் மறைவு கூட வாழ்நாளில்
மறக்கமுடியாத நினைவு அல்லவா?


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வீட்டினுள் உறவு வீதியில் பல பழக்கம் காட்டிற்கு
சென்றால் கடைசியில் யாரோ?
எத்தனைபேர்தான் இருந்தென்ன இலாபம்?
அத்தனை வலிமை யமன் கயிற்றுக்கு.மேலாம்
உற்றவர் சுற்றவரை ஓவென அழவைத்து
ஓடியே சென்றிட்டாய் ஒரு போதும் திரும்பாமல்.
பகலவனார் மேற்றிசையில் ஒருபோதும் உதிப்பதில்லை.
விழுந்தமலர் கொடிதனிலே ஒருபோதும் இணைவதில்லை.
பிரிந்து உயிர் தன்னுடலில் ஒருபோதும் நுழைவதில்லை
தெரிந்திருந்தும் எம்மனங்கள் எப்போதும் ஏங்குவதேன்
என்றென்றும் எம்மோடு வாழும் எம்மகளே! உன் ஆன்ம
ஈடேற்றத்திற்கு இறையடி பணியும்.

**சித்தி ஜெயா**

**சித்தப்பா கந்தையா**

## பாச சுரங்கமே ஏன் மறந்தீர்

சித்தப்பாமார் ஐவர் இருக்க அத்தைமார் இருவர் இருக்க
மாமா என்று ஒருவன் நானிருக்க
அழகு தேவதையே அற்புத நாயகியே ஆசை செல்வமே
அறிவு செல்வமே எமக்கொரு மகளாய் நீயிந்தெம்மை
மகிழ்வித்தீர் என்றிருந்தோம் எம்மாசையும் காணல் நீரானதோ
இலவு காத்த கிளி போல நாமும் ஆனோமே பாசக் சுரங்கமே
எம்மை நினைக்க ஏன் மறந்தீர் செல்வமே மலையாய்
எழுவர் இருந்தோமே நீரும் நாமும் தூரத்தேசத்திலென்றா
கோபங் கொண்டு செல்லாத இடமும் தேர்ந்திருந்தீரோ?

**சித்தப்பாமார்கள்**

**சிவமனோகரன், செந்தூர் செல்வன், நரேந்திரன்,**

**பரணிதரன், நகுலேந்திரன்**

**மாமா – மகான்**

**அத்தைமார்**

**சிவகுமாரி, சிவமனோகரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சோடு நினைவுகள்

உன் இளம் பிஞ்சு மழலையும், கதைக்கும் போதே கண்சிரிக்கும் காட்சியும் என் நினைவில் பதிந்தவை உன் குமரிப்பருவத்தை நேரே காண வரவிருந்தேன் உன் சித்தா தங்கை சரணி, சாணுஜா தம்பி பிரித்திவ் நேரே காண விருப்பமின்றி நீ வெகுதூரம் விரைந்து விட்டாயோ? இச் செய்தி கேட்டு நான் இடிந்துவிட்டேன் நான் என் தாய் வீட்டிற்கு வரும்போது எம்குடும்ப மூத்த பெண் வாரிசு என்ற உன் இடத்தை யார்தான் நிரப்புவார்?
இந்த ஏக்கத்தோடு அழவைத்த என் மகளே
உன் நினைவு என்றும் என்னை விட்டு பிரியாதம்மா

**அன்புடன்**

**சித்தி – கிருபா (ஜேர்மனி)**

**சித்தப்பா – முருகதாஸ்**

## மனம் ஏற்க மறுப்பதேனோ..

அன்பும் பாசமும் நிறைந்த உன் குரல் கேட்டு நாம் பூரித்து விடுவோம். பல்வேறு விடயங்களையும் எம்முடன் பகிர்ந்து கொள்வாய். எம் பிள்ளைகளுக்கு உம்மை மிகவும் பிடிக்கும். எம் பிள்ளைகள் மேல் பாசத்தை கொட்டினீரே. தொலைபேசியில் எம்மை சித்தி என பாசத்துடன் அழைப்பதில் மனம் பூரித்து விடுவோமே மகளே! உனது இச்செயல் எம்மை பதைபதைக்க வைத்துவிட்டதே. உம் இழப்பை எம்மனம் ஏற்குதில்லையம்மா. நீ மறுபிறப்பில் மீண்டும் எமக்கு மகளாய் வாராயோ!

**உம்பிரிவால் வாடும்**

**சித்திமார்கள்**

**கௌரி, ரேணுகா, சுகந்தி, நீரஜா, சிசாணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் அறுந்த பட்டமானோம்

மைத்துனிகள் என்றுரைக்க மகிமையுடன் இருந்தீர்கள்
கற்பனைகள் பல வளர்த்தோம் காற்றினிலே கரைந்ததுவே
அப்பம்மாவின் பிறந்தநாளில் அனைவரும் கூட ஒழுங்கமைத்தீர்
எம் ஆசை அனைத்தும் நூல் அறுந்த பட்டமாயிற்றே
தூர தேசம் நாமிருந்து துளிதுளியாய் கண்ணீர் சிந்த
ஏன் வைத்தாய் மைத்துனியே எம்மை இனி பாராயோ

**மச்சாள்மார் – தர்க்ஷா, மயூரி, ரூபினி**

## எம்மீது கோபமேனோ?

அயலில் இருந்து கூட்டாஞ்சோறு சமைத்து
கூடி விளையாடவில்லை என்ற
கோபத்திலா எம்மை பிரிந்தீர்
கூடிய விரைவில் நாம் இலங்கை வந்து
உம்முடன் கூடித்திரிய கொண்ட
ஆசை என்னாகும் சகோதரியே
தொழில்நுட்ப வளத்தினாலே வைபர்
வட்ஸ்அப் இனால் எம்
பாசத்தைப் பகிர்ந்தோம் - என்றாலும்
கட்டியணைத்து பாசத்தைப் பரிமாற
மறுத்து நீரும் மறைந்து விட்டீர்.

**சகோதரிகள்**

**நனா,நீனா,கல்பனா,துளசி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கையின் நினைவுகளுடன்..

முந்தித் தவம் கிடந்து
முந்நூறு நாட்சுமந்து
கோண மாமலையின் குறைகளில்லா
வரையருளால்
ஈன்றெடுத்த அன்னை ஆளனியின்
இருபத்தேழாம் ஆவணித் திங்கள் அவள்

நீ தவழும் அழகைக் காண
தனி இடம் வேண்டுமென்று
ஆம்பல் பூவில் தேன் சொட்டியது போல
உன் சிரிப்பைக் கண்டு இந்த
சாம்பல்தீவே சரணடைந்தது

மொட்டு இசைக்கும்
பட்டுப் பாவாடையில்
கை தட்டி அழைக்கும் அண்ணனுடன்
கால் தடம் பதித்த கடையில்
வீணாய் கண்ணீர் விட்டது
பன்னீர் மாமாவின் வடைக்காகவோ

குட்டி வயதில் நீ அன்று
பெற்ற புலமையும் - ஊர்
எட்டி நின்று பாராட்டும்
உன் உயர்ந்த கல்வியும்
சுற்றி ஆடும் உன்
சலங்கைச் சத்தமும் - இன்று
கொட்டியே தீர்த்தன நீ
இல்லாத குறைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்த ஆடைக்கு அழகு சேர்க்கும்
உன் துணிந்த நடையும்
வியந்து போயின
சாரணியம் காக்க
சங்கத் தலைவி வந்தவள் என்று

அளவில்லாத உன் அன்புதான் - இன்று
உன் அறைகளை தனிமைப்படுத்தியதோ
வஞ்சகன் பாவினையால்
நஞ்சுண்ட தேனம்மா
இன்று கெஞ்சியும் கேட்கின்றோம் - எமை
கொஞ்சமும் ஏரடுத்து பாராயோ.

**ஆசை அண்ணா**
**சகிலன் (சைலு)**

## அவசரம் ஏனோ.......

அக்கா ஏன் இந்த முடிவு உனக்கு நான் என்றுமே என்னாத குறை உனக்கு உன்னொடு ஒன்றாக பிறக்கவில்லை ஆனாலும் உன்னை என் சொந்த அக்காவாக நினைத்தது தான் உண்மை அம்மம்மா சொல்லவா வேண்டும் நீ என்னோடு சிரித்துப் பழகியதென்னே?

உன்னோடு சேர்ந்து இருந்த ஒவ்வொரு நினைவும் நீயிருந்த இடத்தையும், உனது ஞாபகாரத்தங்களையும் பார்க்கும் போது என்னால் தாங்கமுடியலில்லை நீ வரமுடியாத தோர் இறைவன் வசப்பட்ட இடத்திற்கு சென்றாலும் நீயில்லை என்பதை என்னால் இன்றும் கூடதான் நம்ப முடியவில்லை.

என் பாடசாலையில் என்னை என் நண்பர்கள் திட்டினாலோ, கேலி செய்தாலோ அதை நான் அதிகமாக உன்னிடம் தானெ கூறுவேன் இப்போது அதை கூற யார் இருக்கிறார் என்னதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய், தந்தை இருந்தாலும் சகோதரியோடு இவற்றை பகிரத்தானே எனக்கு விருப்பம் நான் இப்போது யாரிடமடி இவற்றை பகிர்வேன்.

இந்த வெறுமையை எவ்வாறு போக்குவேன். இப்போதும் வழமை போல சிரித்த முகத்துடன் எமது வீட்டு வாசற்படி தாண்டி வரமாட்டாயா? என்று ஏங்குகின்றேன்.கூற்றுவனே உனக்கு நான் செய்த கெடுதி தான் என்னே? ஏன் இவ்வாறு செய்கிறாய்?

இந்த உலகத்தில் பிறந்த அனைவரும் பிறந்தால் இறக்கத்தான் வேண்டுமென்றால் நாம் அனைவரும் நமது சொந்த பந்தத்தை பிரிந்து தவிக்கத்தான் வேண்டு மென்றால் ஏன் எம்மை படைத்தாய்? ஏன் எம்மை இறக்கச்செய்கிறாய் எம்மை மனிதராகவோ அல்லது இப்பூமியையோ படைதிருக்க வேண்டாமே! முழுதும் மிருகங்களாகவும்,தாவரங்களாகவும் படைத்திருக்கலாமே

ஏனெனில் அவை ஏதும் இறப்பு இருந்தாலும் அதனை எண்ணி கவலை கொள்வதில்லை அதை பற்றி சிந்தனை செய்யாது இருந்திருக்குமே எவ்வளவு அழுதாலும் உன்னால் திரும்பி வர முடியாத இடத்திற்கு சென்றாய்

என் அக்காவே என்னதான் இருந்தாலும் இவ்வுலகில் வாழும் அத்தனை மனிதனும் அறிந்தோர் விடயம் இறப்பு. மரணவாயில் திறக்கும் போது எமன் பாசக்கயிற்றை வீசுவதை யாராலும் தடுக்க முடியாது. மரணம் முதிர்வோ இளமையோ, பிள்ளைப்பருவமோ எதிலும் வரகூடும் அதனை ஏற்ற வண்ணம் மீண்டும் நம் வாழ்க்கையை தொடர்வதே வழமை

உன் சேவடி தொட்டு என் அக்காவின் ஆன்மா ஈடேற்றம் பெற இறைவா நீ அருள்புரிவாய் ஆக.

**அன்புத்தங்கை**

**கேஷாயினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றினில் கரைந்ததோ.........

**என் அன்பு சகோதரியே எமன் ஏன் இந்த இரக்கமற்ற செயலை செய்ய துணிந்தானோ**

அன்றைய நாள் செய்தி
என் இரு கண்களையும்
இசருள் சூழ்ந்ததோர் செய்தி
நீ சற்றும் சிந்தனை செய்யாது
உனக்கு செய்து கொண்ட நிந்தனை
எம்மை இன்னும் எத்தனை ஆண்டுகள்
வதைத்து துவண்டு போகச் செய்யபோகின்றதோ தெரியவில்லை
எத்தனை ஆண்டுகள் எவ்வளவு நாட்கள் ஆனாலும்
உன்னினைவு என்னைவிட்டு மறையுமோ

எவ்வகை உணவை உண்டாலும் உந்தன் உணவில் பாதி பறித்து உண்ட அந்த நினைவை மறக்கமுடியுமா. இல்லை நீயும் நானும் ஒன்றாக படுக்கையறையில் படுத்து புறண்டு பல கதைகள் பேசியதை தான் மறக்கமுடியுமா. நீ உன் தாயிடமோ அல்லது நான் என் தாயிடமோ பகிர்ந்து கொண்டதிலும் நீயும் நானும் நமக்குள் பகிர்ந்து தானே அதிகம் என் பிறந்தநாளிற்கு தாயின் பரிசிற்கு அடுத்தபடியாக நான் எதிர்பார்ப்புடன் காத்திருப்பது உன் பரிசிற்கு தானே இப்பொழுது பரிசு கேட்டாலும் கேட்காவிட்டாலும் வாங்கித்தர நீ இல்லையே ஐயகோ இறைவா ஏன் இந்த சோதனை எப்பொழுதும் நீங்கா வேதனையை தந்துவிட்டாயே இதுவா உன்கருணை உன் நினைவுகள் என்னை வருடிச்செல்லும் ஒவ்வொரு நிமிடமும் என்னை துடிதுடிக்க வைக்கின்றன உன் கைகளை பிடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்து சென்ற சாலையோரங்கள் எனக்கு தனிமையை போதிக்கின்றன

நீயும் நானும் எத்தனை கடைகட்கு சென்றோம் செல்லும் வழியெல்லாம் நகைச்சுவை கதைகளும் பேச்சுக்களும் புன்னகைகளும் கலந்திருந்தன இப்போது அவை அனைத்தும் காற்றில் கரைந்து போயினவே நீயில்லை என்ற உணர்வை என்னால் ஜீரணிக்க முடியவில்லை என் அன்பு சகோதரியே ஏனடி என்னை விட்டு பிரிந்தாய் உனக்காக நான் இக்கவிதையை எழுதியுள்ளேன் ஆனால் நான் உன்மேல் வைத்திருக்கும் பாசத்தையோ இந்த தாலினாலேயோ அல்லது இந்த பேனை மையினாலோ கூறவோ, எழுதவோ முடியாது ஜனனமும் மரணமும் இவ்வுலகில் நியதியானதே ஆனால் ஜனத்தின் போது இன்பமும் மரணத்தின் போது துன்பத்தையும் அனுபவிக்கிறான் மனிதன் ஜனனத்தை ஏற்றுக்கொள்வதை போல மரணத்தை அனைவராலும் ஏற்க முடிவதில்லையே ஏன் ?

**- பாசமுடன் தங்கை -**

**தரங்கினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்சுக்குட்டிக்கு லிச்சு எழுதும் சிறிய மடல்

என்னை சந்தோஷப்படுத்திய காலத்தை எமன் இழுத்து விட்டான். நான் அவரை சோகப்படுத்தி சந்தோஷப்படுத்திய காலங்களும் கழிந்து விட்டன. இன்று சந்தோஷமாக எனது அக்காவின் பூப்புனித நீராட்டு விழாபுகைபடத்தில் மட்டும்தான் அவரை பார்க்க முடிகிறது. இன்று நான் ''எனது கம்சு இல்லை" என வருந்திய இந்த காலமும் கழிகின்றது. அவர் என்னுடன் சேர்ந்து கேக் உண்டமை, நான் அவருக்கு கொத்து ரொட்டி ஊட்டியமை, அவர்களின் வீட்டுக்குச் சென்று இனிய சினிமா பார்த்து, எங்களுடன் பல்கலைக்கழக நண்பர்களை பற்றி பகிர்ந்து கொள்வது, எனக்கு இரு கைகளிலும் வர்ணம் பூசி விடுவது, அவரின் அன்பு தம்பி கரூரன் அவளை அழைத்து தொலைபேசியில் பேசும் போது என்னை அழைத்தமை, நானும் கம்சுவும் செல்∴வீ எடுப்பது, அவரின் சின்னண்ணாவுடன் அடிபிடி பட்டு விளையாடுவது, என் பெற்றோர்கள் என்னைக் கண்டிக்கும் போது என்னை மன்னிக்கும்படி காப்பாற்றுவது - இந்நினைவுகள் எல்லாம் என்னை தழுவிவாட்டுகின்றன.

கம்சு நீங்கள் பல்கலைக் கழகத்தால் வந்து விட்டதை யன்னல் வழியால் கண்டால் என் கால்கள் நிலத்தில் நிற்பதில்லையே! வந்தவள எங்கே என்று உங்கள் தந்தையும் தேட, என்தந்தையும் என்னைத்தேட இருவரும் Tutory வாசலில் வணக்கம் சொல்வோம். உங்களிடம் நான் வாங்கும் அடிகளும் திட்டுக்களும் அலுக்கவில்லை இன்னும் தேவைப்படுகின்றது. உங்கள் முகத்தின் அழகோ அப்படி ஒரு அழகு இன்று உறவுகள் சில உங்களைத் திட்டுகின்றன என்ன ஆனாலும், உங்களின் பூதவுடல் மண்ணுக்குள் மறைந்தாலும் உங்கள் ஆத்மா எங்களுடன் நாங்கள் செய்யும் செயல்களை கண்காணித்து வழிநடத்தும் மீண்டும் வாரீரோ! உம் அன்பைத் தாரீரோ!

—இப்படிக்கு அன்புடன்

தங்கை விஷானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முளையிலே கிள்ளிவிட்டீர்....

தம்பி தம்பி என தாகத்தோடு அழைத்தீர்கள்
தமக்கையார் உறவறுத்து தரணிவிட்டு சென்றீர்கள்
தொலைபேசியிலே முகம் பார்த்து
அன்புத்தொல்லை தந்தீர்கள்
உங்கள் தோள்களின் சுகத்தினை ஸ்ரீராம், ரகுராம்
நாம் நினைத்து விம்ம வைத்தீர்கள்
கருரன் நான்தானே உம்சொத்து சுகமெல்லாம்
ஆதியின் தீர்ச்செயல் ஆசையோடு புகழ்வீர்கள்
பந்தத்தை பாசக்கயிறெறிந்து அறுத்துவிட்டான் காலனவன்
பாரினிலே என்றும் உமை நினைத்து ஏங்குகின்றோம்

**தம்பிமார்கள்**
**சந்துரு, ஸ்ரீராம், ரகுராம்,**
**ஆசைத்தம்பி கருரன், ஆதிமித்திரா**

## போய் வா தங்கையே!

வற்றாப்புன்னகையோடு வாழ்ந்த எம் தங்கையே
நீ பேசியவை இன்றும் எம் காதில் ஒலிக்கின்றது
எம்மை நீங்கி நீ எங்கு சென்றாலும்
உந்தன் நினைவுகள் என்றும் நீங்காது
அன்பிலே யார் உனக்கு நிகர்
உனை இழந்து தவிக்கின்றோமே
எமை மறந்து சென்றதேனோ?

உன் முகம் காணாது தவிக்கின்றோம்
பிரிவுகளால் வலி தந்தாயே
உந்தன் உருவம் மட்டுமே
தொலைத்து நிற்கின்றோம் - உணர்வுகளாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ என்று எம்முள்ளே
வாழ்ந்தே வருகின்றாய்

போய் வா தங்கையே பாசமிகு
அண்ணன்களின் செல்ல சண்டைகளை மறந்து
நந்தவன தோட்டத்தில் இருந்து
ஒரு மலர் உதிர்ந்து செல்கின்றது
மற்றவைகளின் இதயத்தில்
இடியினை இறக்கி விட்டு
போய் வா தங்கையே போய் வா

செல்ல சண்டைகளை மறந்து போய் வா
கேலிப் பேச்சுகளை மறந்து போய் வா
எங்களின் நினைவுகளுடன்
போய் வா தங்கையே போய் வா

**அன்பு அண்ணா**
***தீனா***

## பித்தனின் நினைவுகள்

கற்றவை போது மென்று ஏனடி
கல்வெட்டாய் சென்றாய்
இன்று குற்ற உணர்ச்சியால்
குமுகின்றேன் மற்றவர்க்காக - அல்ல
ஹம்சா உன்னை பெற்றவளுக்காக

அம்மா அப்பா இருந்தும்
மணி 6 என்றால் இந்த
அண்ணனின் ஞாபகம் - அதற்குள்
உன் நா சுவைக்கவில்லையெனில்
என்னையே பகைத்திடும் - உன்
நகைப்புத்தனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னில் உதாரணம் காட்ட இந்த
மண்ணில் யாருமில்லை - என்று
என் எண்ணில் அடங்காத
வார்த்தைகளை என்னென்று கூறுவேன்
ஹம்சா நீ கல்லாக இருக்கும் வரை

உருவம் பார்த்து உன்னை
உச்சரித்த போதெல்லாம்
எச்சரிக்க தவறிவிட்டேன் - இன்று
பிச்சையெடுத்து திரிகின்றேன்
பித்தனைப் போல்
இன்னும் எத்தனை நாட்களுக்கோ!

என்றொழியும் உன் நினைவுப்
போராட்டம் ...
இனி எங்கே கேட்கப் போகின்றது
உன் தாயின் தாலாட்டும்

கொடி கட்டி உன் புகழ்
பறக்கும் போதே
அடி மண்ணில் துகளாகிச் சென்றாய்
இருந்தும் துணிவோடு சொல்கின்றேன்
நாளை நீ
என் மகளாக பிறப்பாய் என்று...
கண்ணீரோடு

**அண்ணன் மார், தம்பி**
**மேனன், சகிலன், மதுக்ஷன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

எங்கள் ஆசை அருமைப் பேத்தி அற்புதமாக திறமையாக கல்வியில் முன்னேற்றம் கண்டு கொண்டிருக்கும் வேளையில் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு பிரவேசித்து கல்வி கற்று வந்த சிறந்த மாணவி. அவர் தனது விடாமுயற்சியினால் க.பொ.த சாதாரணதர, க.பொ.த உயர்தரப் பரீட்சையிலும் மிகவும் திறமையாகக் கற்று தேர்ந்து திருகோணமலை மாவட்டத்தில் உயர் நிலையில் சித்தியெய்து, பல்கலைக்கழகத்திலும் கல்வி பயின்று கொண்டு, மேலதிகமாக CIMA, CMA சித்தி எய்தி எங்கள் குடும்பத்திற்கு பெரும் புகழும் தேடித்தந்ததுடன், சமூகத்திற்கும் தன்னுடைய திறமையையும், சேவையையும் செய்து சமூகத்திற்கு தொண்டாற்றுவார் எனக் காத்திருந்த வேளையில் காலன் எங்களிடமிருந்து அவளை பிரித்து விட்டான்.

எங்கள் பேத்தி தனது ஓய்வு நேரங்களில் வெள்ளவத்தை வரும் போது அன்பாகவும், பாசமாகவும் பேசிய குரல் அவளை எங்களுக்கு நினைவுப்படுத்திக் கொண்டு இருக்கும். ஹம்சா ஒரு அற்புதமான மிகவும் ஆற்றலும் திறமையும் படைத்த ஒரு புத்திக் கூர்மையான ஒரு மாணவி. அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

**தாத்தா தணிகாசலம்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

எனது மாணவி ஹம்சத்வனி சிவகுமாரனின் எதிர்பாராத மரணம் மரணமல்ல மௌனிப்பு. எங்களுக்கெல்லாம் பேரதிர்ச்சி என்பதை விட இடிவிழுந்தது போன்ற சம்பவமாகிவிட்டது.

துடிப்புள்ள சுபாவம், எல்லோரையும் கனம் பண்ணி நடக்கும் பனித்துப்போன குணம், நேரம் தவறாத பண்பு, நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள் அண்மியவர்கள் எல்லோருடனும் குழையக் குழையக் பழகும் நேகம் இவையெல்லாவற்றையும் தூக்கியெறிந்து விட்டு எங்கே போய்விட்டாள் என்பது அவளது குடும்பத்தவர்க்கும், உடன் பிறந்தவர்க்கும் மாத்திரமல்ல, என்னைப் போன்றவர்க்கும் ஒரு ஈடுசெய்யமுடியாத இழப்புத்தான். ஹம்சத்வனியின் மரணிப்பு அவரது குடும்பத்திற்கு மட்டும் ஏற்பட்ட நட்டமல்ல. இந்த சமூகத்திற்கும் கல்விக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்.

அவள் படித்து ஆளாகி ஒரு சிறந்த ஆளுமைமிக்க விருட்சமாகி சமூகத்திற்கும், குடும்பத்திற்கும் நிழல் தருவாளென்று எண்ணியிருந்தோம். எல்லாமே கனவாக கதையாகப் போய்விட்டது. அவள் மரணித்தாலும் அவள் இன்னொரு ஆத்மாவாய் உருவெடுப்பாள் என்ற ஆன்மீக நம்பிக்கையுடன் நாம் மீண்டும் எதிர்பார்ப்போம்.

**திரு.சி.நவரத்தினம்**

**முன்னாள் அதிபர்**

**தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கை நோக்கிய பயணம்

**"ஓர் இலக்கைக் கொண்டே நாம் இயங்க வேண்டும். அவ் இலக்கின் தூரத்தினை நாம் மனம் கொள்ள வேண்டும்"** என்பதனை மனதில் கொண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தரம் கற்கும் மாணவர்களின் நிலையையும், கற்றல் தொடர்பிலான சில கருத்துக்களையும் எடுத்து நோக்க முயல்கின்றேன்.

க.பொ.த. உயர்தரம் என வரையறை செய்யப்படும் இலக்கினை நோக்கிய இந்தப்பயணத்தில் இன்றைய நிலையில் இரு வெவ்வேறு விதமான மாணவர்களை சந்திக்க நேரிடுகிறது. ஒன்று, தமக்கென்ற பொருத்தமான ஒரு இலக்கினை தெரிவு செய்ய முயல்பவர்களாகவும் மற்றையவர்கள் முயற்சியினை மேற்கொள்ள தவறுபவர்களாகவுமே காணப்படுகின்றனர். எமது இலங்கை நாட்டின் கல்வி முறைமைகளில் பல நிறைவுகளும், குறைவுகளும் இருப்பது என்பது கண்கூடு. ஆனால் எவ்வாறாயினும் உயர்தரம் கற்பதற்காக முன்வந்த மாணவர்கள் என்ற வகையில் இந்த ஏட்டுக்கல்வி என்ற தடைக்கல்லினைத் தாண்டி செல்ல வேண்டிய கடப்பாடு உடையவர்களாகவே நாம் அனைவரும் காணப்படுகின்றோம். இங்கு நாம் நோக்கும் இலக்கு என்பது பரந்த உலகிற்கு மிகச்சிறிய வட்டமாகத் தென்பட்டாலும், இந்த உயர்தரம் என்ற சிறிய வழியினை முறையாகப் பயன்படுத்த முயல வேண்டியது எமது அளப்பரிய கடமையாகும்.

உயர்தரக் கல்வியினை இரு வெவ்வேறு நோக்கங்களாக வகுப்போமாயின், பரந்த அறிவினைத் தேடிக்கொள்ளல் என்றும், முறையான தயார்படுத்தல் என்றும் கருதலாம். மாணவர்களிடையே சிலர் பரவலாக ஒரு விடயத்தினை அறிந்து கொள்ள முயலும் அதேவேளை சிலர் குறித்த விடயங்களுக்கு மாத்திரம் முக்கியம் செலுத்துபவர்களாக காணப்படுகின்றனர். ஆனால் இரண்டும் முக்கியமானவையே. உதாரணமாக ஒரு 2019ல் உயர்தரப்பரீட்சையை எதிர்நோக்கி கல்வி கற்கும் மாணவரை கருதினால் தான் கற்கும் விடயங்களில் பரவலான அறிவினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தி செய்ய முயன்று அவ்விடயங்களில் தனக்கென்ற சுயவிருப்பத்தினை ஏற்படுத்த முயல்வது அவரின் ஆரம்ப வருடத்திற்கான முயற்சியாக இருக்க வேண்டும். ஆனால் 2018 இறுதிப் பகுதிகளில் தனது நிலைப்பாட்டில் மாற்றத்தினை ஏற்படுத்தி தான் அறிந்த கற்ற விடயங்களை அடிப்படையாக் கொண்டு தன்னை பரீட்சைக்குத் தயார்படுத்த குறித்த விடயங்களுக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுப்பவராக மாற்றிக்கொள்ள முயல வேண்டும்.

உயர்தர மாணவர்களிடையே இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் இன்றைய நிலையில் மாணவர்களின் கல்வியில் வெவ்வேறுபட்ட நிலைகளை ஏற்படுத்தக்கூடிய ஆயுதம் "சுயகற்றல்". இது இன்றைய உயர்தர மாணவர்களிடையே மிகக் குறைந்த அளவில் காணப்படும் அல்லது முறையாக பயன்படுத்தப்படாத நிலையிலேயே உள்ளது. கற்பித்தல் என்பது மாணவர்களுக்கு அறிவினை ஆசிரியர் ஒருவர் வழங்க முயல்வதே ஒழிய மாணவரின் நிலையினை மாற்றியமைத்தலோ, குறித்த மாணவரை பரீட்சைக்கு தயார்படுத்துவதோ அல்ல என்பதனை மாணவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இன்று கற்பித்தலிற்கும் கொடுக்கப்படும் முக்கியத்துவம் கற்றல் எனும் கூரிய ஆயுதத்திற்கு இல்லை என்ற நிலையினை ஏற்படுத்த முயல்வது கவலைக்குரிய விடயமாகும்.

சுயகற்றல் என்பது குறித்த ஒரு விடயம் தொடர்பில் பாடசாலையிலும், தனியார் வகுப்புக்களிலும், வெவ்வேறு மூலங்களில் இருந்து நாம் அறிந்து கொண்ட அனைத்து விடயங்களையும் தொகுத்து குறிப்பாக்கி அவற்றிற்கான பயிற்சியினை மேற்கொண்டு கற்றறிந்த விடயங்களை ஒழுங்குபடுத்துவதே ஆகும். வெறுமனே மேசையில் நேரம் கடத்துவது போல தெளிவான நோக்கம் இன்றி பல்வேறுபட்ட தலைப்புக்களில் உள்ள விடயங்களை ஒரே நேரத்தில் மேற்கொள்வது அல்ல என்பதை மாணவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். சுயகற்றல் என்ற விடயம் தொடர்பில் மாணவர்களிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணப்பாட்டினைத் தோற்றுவிக்க முயல்வோமாயின் கீழ்வரும் திட்டம் சிறிது உதவியாக இருக்கும் எனக் கருதுகின்றேன்.

சுயகற்றலிற்கான திட்டம்

01. கற்றலிற்கான நேரசூசி அமைத்தல்

நேரசூசி என்பது பாடசாலையிலோ அல்லது தனியார் வகுப்புகளிலோ கற்பித்தலிற்கு இடப்படுவது போன்று பொதுவானதாக அல்லாது நாம் எமது கற்றல் நோக்கங்களையும், கற்று அறியும் திறனையும் அடிப்படையாகக் கொண்டு அமைத்துக்கொள்வதாகும்.

- ஒவ்வொரு நாளிற்கானது
- வாரத்திற்கானது
- மாதத்திற்கானது
- பரீட்சையை மையமாகக் கொண்ட நேரசூசி

02. கற்றலிற்கு பொருத்தமான சூழலினை அமைத்துக் கொள்ளல்

- அமைதியானது
- பொருத்தமான அமைப்பு (அடிக்கடி மாற்றிக்கொள்ளல்)
- தேவையான பொருட்கள் முறையாக அடுக்கப்பட்டிருத்தல்

03. கற்றலிற்கு பொருத்தமான நேரத்தினைத் தெரிவு செய்தல்

- அதிகாலையில் கற்றல்
- நேர இடைவெளிகளை எடுத்துக் கொள்ளல்
- தனியார் வகுப்புக்களுக்கான நேரத்தினை ஒதுக்கிக்கொள்ளல்
- கற்றல் தவிர்ந்த ஓய்வு நேர செயற்பாடுகளிற்கு என நேரத்தினை ஒதுக்கிக்கொள்ளல்

04. கற்றலிற்கான விருப்பத்தினை உருவாக்குதல்

- எண்ணியவுடன் கற்க ஆரம்பித்தல்
- ஊக்கமூட்டும் பாடல் / பேச்சுக்களை கேட்டல்
- இலகுவானவற்றில் ஆரம்பித்தல்
- எதிர்காலத்தில் அடையக்கூடியவற்றைச் சிந்தித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடற்ற நோக்கங்களும், திட்டங்களும் வெறுமனே கனவு காண்பதே என்ற வகையில் சுயகற்றலிற்கான திட்டத்தினை மேற்கொண்ட ஒருவர் சுயகற்றல் பொறிமுறையினை ஒழுங்கமைத்து செயற்படுத்துவது மிக முக்கியமான விடயம். அவ்வாறான கற்றல் செயற்பாட்டின் போது கவனிக்க வேண்டிய விடயங்களை நோக்குவோமாயின்,

- கற்பிக்கப்படுவதற்கு முன்னரே பாடப்பரப்பினை அறிந்து கொள்ள முயல்தல்

தற்காலத்தில் காணப்படும் பல்வேறுபட்ட வசதிகளைப் பயன்படுத்தி ஒவ்வொரு மாணவரும் தனக்கு ஒரு விடயம் கற்பிக்கப்படுவதற்கு முன்னரே அது தொடர்பில் ஒரு சில விடயங்களை அறிந்து கொள்ள முற்படுதல் ஒவ்வொரு மாணவனிற்கும் கற்பித்தல் செயற்பாட்டில் கூரிய கவனம் செலுத்துவதற்கு ஊக்குவிக்கும்.

- பாடசாலை, தனியார் வகுப்பில் பெற்றுக்கொள்ளும் குறிப்புக்களை முறையாகப் பேணல்
- கற்பிக்கப்பட்டதன் பின் குறிப்புக்களை மீண்டும் வாசித்து கிரகிக்க முயல்தல்
- ஒழுங்குமுறையாக விடயங்களை சுருக்கிக் கொள்ளுதல். உதாரணமாக பல்வேறுப்பட்ட மூலங்களில் இருந்து அறிந்து கொண்ட சகல விடயங்களையும் ஓரிடமாக்கல்.
- வினாக்களைத் தேடி விடையளிக்க முயற்சி செய்தல்
- மீண்டும் சுருக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பாடப்பரப்பை மீட்டல்
- கற்றறிந்தவற்றை பொருத்தமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தல்
- நண்பர் ஒருவரிற்கு கற்பித்தல்
- காலத்திற்கு காலம் மீட்டல்
- எல்லா விடயங்களிலும் **check list** பேணல்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களை ஒவ்வொரு மாணவரும் தனக்கு ஏற்றாற் போல் சிறிது மாற்றியமைத்து பின்பற்றும் பட்சத்தில் கற்றல் நடவடிக்கையினை சிறப்பாக மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதுடன் பரீட்சையை எதிர்நோக்குவதற்கான பயம் உருவாகுவதும் குறைவாக இருக்கும்.

உயர்தரம் கற்கும் மாணவர்களிடையே இருந்து அறிந்து கொண்ட விடயங்களின் அடிப்படையில் மேலும் மூன்று விதமாக எண்ணக்கருக்களை இலக்கை நோக்கிய பயணத்தில் எடுத்துத்தியம்ப வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

**01. நேர முகாமைத்துவம்**

பொருத்தமான அளவு நேரம் வினைத்திறனான கற்றலின் முக்கியத்துவத்தினை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாணவரிற்கும் வெவ்வேறுபட்ட நேரங்கள் கற்றலினை மேற்கொள்வதற்கு பொருத்தமானதாக அமையும். அவற்றினை அறிந்து கொண்டு தினமும் அதன் அடிப்படையில் பின்பற்றி ஒழுக வேண்டும். தனியார் வகுப்புக்களிற்கு மாணவர்கள் அளிக்கும் அதே முக்கியத்துவத்தினை ஒவ்வொரு மாணவரும் தனது சுயகற்றிலிற்கும் வழங்க வேண்டும். மேலும் பாடசாலையில் நேரங்களில் பொருத்தமான நேரங்களை முறையாக தனது சுயகற்றலிற்கு பயன்படுத்திக் கொள்வதும் மாணவர்களிடையே அரிதாகக் காணப்படும் நடைமுறையாகும்.

**02. இணைப்பாடவிதான, ஓய்வு நேர செயற்பாடுகளிற்கு நேரம் ஒதுக்கல்**

ஏட்டுக்கல்விக்கு மெருகூட்டுவது இணைப்பாடவிதான செயற்பாடுகள். பொருத்தமான இணைப்பாடவிதான, ஓய்வு நேர செயற்பாடுகள் ஒரு ஒழுங்கமைவான கற்றல் நடவடிக்கையினை மேற்கொள்ள துணை நிற்பன. உதாரணமாக சாரணீயம், விளையாட்டுக்கள் போன்றன நேரடியாக பாடத்தினைக் கற்பிக்காவிடினும் நிச்சயமாக எந்தவொரு செயற்பாட்டினையும் திறம்பட மேற்கொள்ளும் மனப்பாங்கை ஏற்படுத்தித்தருவன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை முறையாகப் பயன்படுத்தி கற்றலில் முன்னேறுவது மாணவர்களின் பொறுப்பேயாகும்.

### 03. மனப்பான்மை

உயர்தரப் பரீட்சை என்பது ஒரு போட்டிப்பரீட்சையாகும். ஆனால் இன்றைய சமுதாயத்ததில் உயர்தரப் பரீட்சை பொறாமை, தாழ்வுமனப்பான்மை போன்றவற்றை மாணவர்களிடையே தோற்றுவிக்கும் ஒன்றாக திகழ்கின்றது. உதாரணமாக அனைத்து களியாட்டங்களிலும், ஓய்வு நேர செயற்பாடுகளிலும் ஒன்றாக செயற்படும் பல மாணவர்கள் கற்றலில் அதே தன்மையினைக் கடைப்பிடிக்கத் தவறுகின்றனர். வெறுமனே உயர்தரப்பரீட்சையின் வெற்றி ஒரு மனிதனை பூரணமாக்கி விடாது என்பதனை ஒவ்வொருவரும் உணரும் பட்சத்தில் பல மாணவர்கள் சிறப்பான கற்றல் நடவடிக்கையினை மேற்கொள்ள முடியும் என்பதில் ஐயமில்லை.

இன்றைய நடைமுறையில் உயர்தரத்திற்கான முக்கியத்துவம் சிலரிடையே குறைவாகக் காணப்பட்டாலும், உயர்தரம் மாத்திரம் எதிர்காலத்தினைத் தீர்மானிக்காது என்ற எண்ணப்பாடு நிலவினாலும், **நாம் உணர வேண்டியது எமது எதிர்காலத்தினை சிறப்பான முறையில் ஒழுங்கமைக்க உயர்தரக் கல்வி ஒரு வாய்ப்பேயாகும்.** அதனை முறையாக பயன்படுத்தினால் பிறிதொரு வாய்ப்பிற்கான காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. இவ்வாறாக இந்தக் கட்டுரையின் ஊடாக மாணவர்களிடையே சுயகற்றலிற்கான முக்கியத்துவத்தை உணர்த்தி உயர்தர கல்வியை இனிமையாகதொன்றாக மாற்ற வேண்டும் என்ற எண்ணப்பாடு நிறைவேற இது ஒரு அடிக்கல்லாக அமையட்டும்.

**S.P. இந்துஜன்**
**ஹம்சாவின் அண்ணா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலிகை முத்துக்கள்

❄ மாதுளை தாய் போல் வயிற்றைக் காக்கும்
மாதுளை தோல் கருப்பையைக் காக்கும்

❄ தூதுவளை, துளசி நுரையீரலின் போர் தளபதிகள்

❄ அமுக்ரா, ஓரிதழ் தாமரை ஆற்றல்மிகு நரம்பிற்கு உறுதி அளிப்பார்கள்

❄ தாமரை செம்பருத்தி இதயத்தை இதமாக்குபவர்கள்

❄ நெல்லியும் காரட்டும் கண்களைக் கணிவாகக் கவனிப்பவர்கள்

❄ மூளையைப் பாதுகாக்க வல்லாரை, ரோஜா கூட்டணி உதவும்

❄ இளமையின் சொந்தக்காரி சோற்றுக்கற்றாலையும் வெள்ளரியும்

❄ நீரிழிவை மட்டுப்படுத்த (குடசப்பாலை) வெந்தியக் கூட்டணி

❄ நாவல் நெல்லி, கூட்டணி நீரிழிவு அன்பர்களின் அருமையான மருத்துவங்கள்

❄ சிறுநீரகக் கல்லைக் கரைப்பதில் மகா வல்லவர்கள் நெருஞ்கிலும் வாழைத்தண்டும்.

❄ அதிக உடல்கூட்டைத் தனித்திட அருகம்புல் வெண்பூசனியால் இயலும்

❄ மூட்டுவலி முழுவதும் மறைய முடக்கற்றான் மூக்கரட்டை கூட்டணி

❄ மணத்தக்காளி அத்தி கூட்டணியால் அல்சர் அகலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❊ நெல்லி, கீழாநெல்லி கூட்டணியால் கல்லீரலை காக்கலாம்

❊ புற்றுநோய்க்கும் முற்றுபுள்ளி வைக்க மூளைக்கோதுமையும் நித்தியகல்யாணியும்

❊ உறக்கத்தின் உன்னத நண்பர்கள் சர்ப்பகந்தாவும் முருங்கையும்

❊ திருமேனியின் பாதுகாவலர்கள் புதுமேணியும் குப்பைமேனியும்

❊ வைத்திய மாதரசி ஆடாதொடையால் பாடாத நாவும் கானம் பாடும்

❊ தாய்பால் குறைவின்றி சுரப்பவர்கள் அம்மான் பச்சரிசியும் ஆங்கர திராட்சையும்

❊ நஞ்சை முறித்திட சிறியா நங்கை நரம்பைக் காத்திட முருங்கை

கீரைகளின் அரசன் முருங்கை மூலிகைகளின் சூப்பர் ஸ்டார் கீழா நெல்லி, செம்பருத்தியால் செவ்விதழ் மங்கையராய் முருங்கையால் மன்மதனாய், வல்லாரையால் ஞானத்தின் நாயகனாய் நெல்லியால் இளமையின் பொக்கிஷதராய் மாறிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலிகை மொழிகள்

- மருந்தாகித் தன் பகுதி மக்கள் நோய் தீரக்கும் அற்புத மருந்துவரே - வேப்பமரம்
- ஐம்பொறிக்கும் அதிசய மருத்துணவு - நெல்லியே கீரைகளின் அரசன் முருங்கைக் கீரையால்
- தேங்காயும், வாழையும் மனிதர்களின் முதல் தர இயற்கை உணணவுகள்
- தேங்காய்பால் பேரீட்சை துட்டணி வாதம் கபம் தீர்க்கும் அதிசய மருந்து
- வெந்தியம் வெள்ளகரு விலக்கப் பெண்களின் அற்புத நலக்கொடை
- இரத்தம் கொழிக்க செம்பருத்தி இருமலைக்குறைக்க சித்தரத்தை
- சிறுநீரகம் சிறப்புற முள்ளங்கி இரப்பை நலமுற முட்டைகோஸ்
- குடலுக்கு கோரைக்கிழங்கு- உடலுக்கு உருளைக்கிழங்கு
- ஆண்மை ஓங்க அமுக்ரா ஆஸ்துமா விலக ஆடாதோடை
- கடும் சளி கரைய கண்ல்கத்தரி - கால் ஆணி குறைய அம்மான் பச்சரி
- அருகம்புல்லும் அத்தியும் ஆணவாய் பிணிகளும் முற்றுப்புள்ளி
- காலை நல்ல நல்த்தின் எதிரி காலையில் குடிக்கும் நீர் உடல் நல்ல நண்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிந்து கொள்வோம்

பிறப்புறுப்பின் நோய்க்கு பிறிது மருந்துண்டே சிறப்பின்

காலை காபி உடல் நல எதிரி

காலை குடிக்கும் தண்ணீர் நல்ல நண்பன்

காலை வாந்தி நமது தோழன்

இளைத்தவருக்கு எள்ளு கொழுத்தவருக்கு கொள்ளு

பாடப்பாட ராகம் பீரிட்டு விடும்

மிமமிஞ்சிய உணவால் ரோகம் ஊற்றெறிக்கும்

பக்கவாதத்தை முறியடிக்க குண்டுமோடி - தழுதாழை கண்டு

முத்தோஷம் குறை காலையில் இஞ்சி நண்பகல் சுக்கு மாலையில் கடுக்காய்

**தொகுப்பு :- சித்தமருத்துவ பீட மாணவன்**

**மூத்தன்னா**

**ஹயன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சம்

## அமரர்

## செல்வி.ஹம்சத்வனி சிவகுமாரன்

செல்வேந்திரன் + பரமேஸ்வரி → **சிவகுமாரன்**

சிவகுமாரி
சிவமனோகரன்
சிவமனோகரி
நரேந்திரன்
பரணிதரன்
நகுலேந்திரன்

செல்லையா + யோகாம்பிகை → **பிரபாலினி**

ஜெயபாலினி
கிருபாலினி
விஜயபாலினி

சிவகுமாரன் — பிரபாலினி →

ஹயக்கிரீவன்
இந்துஜன்
ஹம்சத்வனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நன்றி நவிலல்

அமரர்

## செல்வி. ஹம்சத்வனி சிவகுமாரன்

அவர்களின் மறைவைக் கேட்டவுடன் ஓடோடி வந்து ஆறுதல், கூறியதுடன் அஞ்சலி செலுத்திய நல் நெஞ்சங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். அன்னாரின் இறுதி சடங்குகளில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியவருக்கும் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் பதாதை காட்சி படுத்திய சக உத்தியோகத்தர்கள் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த நல் உள்ளங்களுக்கும் பல வகையிலும் உதவிய உற்றார் உறவினர் அயலவர் நண்பர்களுக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

- குடும்பத்தினர் -



சமாது லேன்


- தொகுப்பாசிரியர் : சுந்தா (0756901316)
- அச்சு : ஏ.ஆர்.டிரேடர்ஸ் 0777695656


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை நீ இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள், அது வேறொருவருடையதாகும்



"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

ART 0777695656

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org